


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.6.2024) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் 2024–2025 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.6.2024) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் 2024–2025ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.6.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு 2024–2025ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (21.6.2024) காணொலிக் காட்சி வாயிலாக, கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வருவாய் நிருவாக ஆணையர். கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி. செந்தில்குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை மாநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாடாளுமன்ற தேர்தலில் தயாநிதிமாறன், தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி ஆகியோர் வெற்றி பெற்றனர். இதையொட்டி சென்னை மயிலை உயர் மறை மாவட்ட பேராயர் மேதகு. ஜார்ஜ் அந்தோணிசாமியை நேற்று சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றனர். அருகில் சாந்தோம் பேராலாயத்தின் அதிபர், பங்கு தந்தை வினிசென்ட் சின்னதுரை உள்ளிட்டோர் உள்ளனர்.

### கள்ளக்குறிச்சி சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றிட

# 200க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் - பணியாளர்கள் முழு நேர மருத்துவச் சேவையாற்றி வருகிறார்கள்!

## பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை முறை குறித்து கேட்டறிந்தபின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

கள்ளக்குறிச்சி, ஜூன் 22-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (21.06.2024) கள்ளக்குறிச்சி சம்பவத்தில் பாதிக்கப்பட்டு புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை, கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையிலிருந்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தற்போதுவரை 168 பேர், இதில் பெண்கள் 9 பேர், திருநங்கை ஒருவர். அந்தவகையில் சம்பவம் நடைபெற்ற முதல் ஒரு சில மணி நேரங்களிலேயே முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களையும், என்னையும், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் அவர்களையும், மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களையும் கள்ளக்குறிச்சிக்கு அனுப்பி அவர்களுக்கு போதுமான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தி தருவதற்கு அறிவுறுத்தினார்.

அந்தவகையில் இந்த சம்பவம் நடைபெற்ற பகுதிகளில் மருத்துவமனைகளுக்கு வராமல் இருப்பவர்களை மாவட்ட சுகாதார துணை இயக்குநர் அவர்களின் தலைமையிலான குழுவினை அமைத்து வீடுகள் தோறும் சென்று கண்ணெரிச்சல், வயிற்று எரிச்சல் போன்ற பாதிப்புகளோடு இருப்பவர்களை மருத்துவமனையில் சேர்க்கும் பணி தொடங்கப்பட்டது. அந்தப்பணிகளால் 55 பேர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டார்கள். இதில் இதுவரை 48 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த 48 பேரில் கள்ளக்குறிச்சி மருத்துவனையில் 25 பேரும், புதுவை ஜிப்மரில் 3 பேரும், சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 16 பேரும், விழுப்புரத்தில் 4 பேர் என்று மொத்தம் 48 பேர் மரணமடைந்திருக்கிறார்கள். இதில் 3 பெண்கள், 1 திருநங்கை உட்பட 48 பேர் மரணமடைந்திருக்கிறார்கள்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிதி உதவி வழங்கினார்!**

முதலமைச்சர் அவர்கள் நேற்று இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை கள்ளக்குறிச்சிக்கு அனுப்பி அவர் வாயிலாக மரணமடைந்த குடும்பத்தாருக்கு நிவாரணமாக தலா ரூ.10 இலட்சத்திற்கான காசோலையினை அவர்களுடைய இல்லங்களுக்கே சென்று வழங்கியுள்ளார்கள். திருவண்ணாமலை, திருச்சி, சேலம், விழுப்புரம் போன்ற மாவட்டங்களிலிருந்து 67 மருத்துவர்கள் கள்ளக்குறிச்சி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் 200க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் 24 மணிநேரமும் முழுநேரமாக மருத்துவச் சேவையாற்றி வருகிறார்கள்.

கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரை 600 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனை, இருந்தாலும் இந்த பாதிப்புகளில் இருப்பவர்களை கவனித்துக் கொள்ள 50 படுக்கைகள் கூடுதலாக பிரத்யேகமாக அமைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மெத்தனால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உடனடியாக பார்வை பறிபோகும், இருதயம், சிறுநீரகம், கல்லீரல் போன்ற உறுப்புகள் படிப்படியாக செயலிழக்க தொடங்கும் என்பதால் அவர்களுக்கு தேவையான சிகிச்சை முறைகளை மருத்துவர்கள் மிகச் சிறப்பாக செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

முறையாக மூக்கு வழியே பிராண வாயு செலுத்துதல், நரம்பு வழியே குளுக்கோஸ் செலுத்துதல், எத்தனால் ஊசி முதல் ஒரு மணி நேரத்திற்கு ஒன்றும், இரத்த நாளத்தில் உள்ள பைக்கார்போனேட் அளவினை சரி செய்ய சோடா பைகார்பேனேட் (Soda Bicarbonate) ஊசி செலுத்துதல், ஹீமோடயாலிஸிஸ் (Hemodialysis) செய்தல், பென்டோபிராசில் (Pantoprazole) ஊசி போடுதல், செயற்கை சுவாசம் அளிப்பதற்கு வெண்டிலேட்டர் சிகிச்சை அளித்தல் என பல்வேறு வகையான சிகிச்சைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.

இதில் மது அருந்தி நீண்ட நேரம் ஆனவர்கள் அவர்களது உடலுறுப்பு ஒவ்வொன்றாக செயலிழந்து வருகிறது என்று தெரிவதற்கு முன்னாள் கூட மருத்துவமனைக்கு வர தயக்கம் காட்டியதால் இறப்புகள் அதிகம் சந்திக்க நேர்ந்தது. புதுவையைப் பொறுத்த வரை 8 பேர் Stable நிலையிலும், 8 பேர் ஆபத்தான நிலையிலும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதில் இன்று காலை நோயாளியுடன் உடனிருந்தவருக்கு பாதிப்பு தென்பட்டு அவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவரும்கூட இரண்டு நாட்களுக்கு முன்னாள் மது அருந்தியிருக்கிறார். அவர் வெளியில் சொல்லாமல் அதற்குரிய பாதிப்பு தென்பட்டவுடன் தற்போது அனுமதிக்கப்பட்டிருக்கிறார். எனவே புதுவை ஜிப்மர் மருத்துவமனையைப் பொறுத்தவரை 9 பேர் Critical Ward லும், 8 பேர் பொது வார்டிலும் அனுமதிக்கப்பட்டு மிகச் சிறப்பாக சிகிச்சை பெற்று வருகிறார்கள். Critical Ward இல் உள்ள 9 பேரில் 4 பேர் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள், அவர்களுக்கு இம்மருத்துவமனை நிர்வாகம் 100% அனைத்து சிகிச்சைகளையும் வழங்கி வருகிறார்கள். சேலத்தினைப் பொறுத்தவரை 31 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். 23 பேர் Stable என்கின்ற நிலையினும், 8 பேர் Critical என்கின்ற நிலையிலும் இருக்கிறார்கள்.

அடுத்து சேலம் மாவட்டத்திற்கு சென்று அங்கு பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திக்க இருக்கின்றோம். முதலமைச்சர் அவர்கள் இன்று சட்டப்பேரவையில் இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் மிகத் தெளிவாக எடுத்துக்கூறி பாதிக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய நிவாரணங்கள் வழங்கப்பட்டிருக்கிறது, இன்னமும் எதிர்காலத்தில் எந்த மாதிரியான நிவாரணங்கள் வழங்கப்படும் என்பதனையும் தெரிவித்து அதோடுமட்டுமல்லாமல் எதிர்காலத்தில் எத்தனால் விஷயத்தில் மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

அந்தவகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்து, அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிவதுமான பணியில் ஈடுபட்டிருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், புதுவை ஜிப்மர் மருத்துவமனை இயக்குநர் மரு.ராகேஷ் அகர்வால், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.துரைராஜன், மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (21.06.2024) புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், புதுவை ஜிப்மர் மருத்துவமனை இயக்குநர் மரு.ராகேஷ் அகர்வால், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.துரைராஜன், மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

